# தூதன்

தூதன் - 30 ஜூலை - 2021 தூது - 7

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. ரோமர் 8:2

This is how
*I Fight*
my battles



Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| செயலர் மடல் | 01 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 03 |
| மலைப்பிரசங்கம் | 04 |
| திருச்சபை ஜெபநாள் | 05 |
| எல்க்கானா – அன்னாள் | 07 |
| வேதவினா போட்டி | 09 |
| தெரிந்துகொள்வோம் | 11 |
| Health Tips | 13 |
| Children's Corner | 16 |
| Birthday Celebrants | 22 |
| Wedding Anniversary | 26 |
| Jesus Boat | 27 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# செயலர் மடல்

மாறிவரும் உலகில் மாறாதவரும், மாசற்றவரும், மானிடராம் நம்மை இம்மாநிலத்தில் கடந்த ஆறு மாதங்கள் கடந்துவர கிருபை தந்தவருமாகிய தேவாதி தேவனுக்கே மகிமையைச் செலுத்துகிறேன்.

மூன்றாண்டுகள் திருச்சபையின் தலைமைப் போதகராக சிறப்பாக இறைப்பணி முடித்து தாயகம் திரும்பியுள்ள Rev.Victor Premkumar ஐயா குடும்பம் தொடர்ந்து கோவை திருமண்டலத்தின் தலைசிறந்த ஆயராக, பேராயராக இறைபணியாற்றிட வாழ்த்துகிறேன். நமது சபையில் பணியாற்றிட வர இருக்கும் ஆயர்கள் மற்றும் பணியாற்றிச் சென்ற முன்னாள் ஆயர்கள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

ஆலய வழிபாடுகள், Camp Ministry, Junior Church, Fasting Prayer, Men/Women Fellowship, Prayer Cell போன்ற சிறப்பு நிகழ்வுகள் யாவும் online மூலம் சிறப்பாக, தடையில்லாமல் நடைபெற திருச்சபையின் நல்ல மேய்ப்பராம் கர்த்தாதி கர்த்தர் கிருபை பாராட்டின தயவுகளுக்காக நன்றி செலுத்துகிறேன்.

நமது திருச்சபையின் 2020-2021 வருடாந்திர செயலர் மடல், வருடாந்திர வரவு செலவு, Auditor தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள், 2021-2022-க்கான புதிய Budget யாவும் நமது சபை Website-ல் வெளியிட கர்த்தர் கிருபை செய்தார்.

நமது துபாய் ஆலய 30நிமிட துதி ஆராதனைகளையும், Fujairah, Ras Al Khaimah கிளைச்சபைகளின் திருவிருந்து ஆராதனைகளையும் கடந்த மாதத்தில் நடத்தி நமக்கு உதவிசெய்த Rev.Rajamanickam, SHJ-CSI, Rev.Ajith, UAQ-CSI ஆயர்களுக்கும் நமது சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நாட்களில் நமது திருச்சபையிலும், Fuj, RAK கிளைச்சபைகளிலும் Covid-19-ஆல் பாதிக்கப்பட்டு தங்களுக்கு அருமையானவர்களை இழந்த ஒவ்வொருவருக்கும் நமது சபையார் சார்பாக ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்த்தருடைய மேலான கிருபையினால் நமது துபாய் சபையிலும், கிளைச்சபையான Fuj, Rak-விலும் CM Covid Relief Fund தமிழ்நாட்டில்

உதவிசெய்யும்படியாக சபையாரால் அர்ப்பணிக்கப்பட்ட Rs.15,00,000 CM Covid Relief Fund-க்காக உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கொடுக்க உதவிசெய்த சபையாருக்காக நன்றி செலுத்துகிறோம்.

நமது திருச்சபை தாங்கும் 100 மிஷனெரிகள், அவர்கள் குடும்பம், பாதுகாப்பு, தேவைகள் யாவுக்காகவும் ஜெபிப்போம். கொளகூர் பணித்தளத்தில் மிஷனெரி மருத்துவமனையில் குடும்பமாக பணியாற்றி வரும் Dr.Samuel Delightson அவர்கள் மருத்துவ பணிகளுக்காக, உதவியாளர்களுக்காக, பாதுகாப்புக்காக தொடர்ந்து ஜெபிப்போம். Corona virus தாக்குதலால் ஏற்பட்ட உயிர் இழப்புகள், வேலை இழப்புகள், உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவுகள் யாவுக்காகவும் ஜெபிப்போம். ஆராதனை நடைபெறுவதற்காக worship license-க்காக எடுத்துவரும் முயற்சிகளில் அரசு அங்கீகாரம், Bank Transaction-ல் உள்ள தடைகள் யாவையும் நமது கர்த்தர் தாமே தயவாக நமக்கு முன்சென்று பாதைகளை செவ்வைப்படுத்திட தொடர்ந்து ஊக்கத்தோடு ஜெபிப்போம். தடைகளை நீக்கிட கர்த்தர் கிருபையாக உதவி செய்வார். “தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்.” யோபு 42:2.

Babu Jeyaseelan, Secretary.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜூலை 2021

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-07-2021 | பொறுப்பாண்மை: வெளிப்படைத் தன்மையும் கணக்கு ஒப்புவித்தலும் | யாத்தி. 36:2-7 | பிலிப்பியர் 4:10-20 | லூக்கா 19:11-27 | 116:12-19 |
| 09-07-2021 | இறையியல் கல்வி: பற்றுறுதியைஅறிந்து கொள்ளுதலும் செயல்படுத்துதலும் | யாத்தி. 3:1-12 | 2தீமோ. 2:1-13 | யோவான் 12:20-26 | 111 |
| 16-07-2021 | இறைமக்கள்: உப்பாகவும் ஒளியாகவும் இருப்பர். | ஏசாயா 49:1-7 | எபேசியர் 5:1-5 | மத்தேயு 5:13-16 | 27 |
| 23-07-2021 | அருட்பொழிவு திருப்பணி கிறிஸ்துவின் காயங்களால் அடையாளப் படுத்தப்படுகின்றது. | 1 சாமுவேல் 22:12-23 | கலாத்தியர் 6:11-18 | யோவான் 21:15-19 | 56 |
| 30-07-2021 | அருட்பணி: கடவுளின் பாடுகளைப் பகிர்தல் | ஏசாயா 6:1-8 | அப்போ. 9:10-18 | லூக்கா 10:1-11 | 40:1-13 |

# நீங்கள் கிறிஸ்தவரா...

"ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே,
மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே,
உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்."
1 தீமோத்தேயு 5:22

வாழ்வை
வளமாக்க
வசந்தமாக்க
கிறிஸ்தவம்...
வேதத்தின்
வழிமுறைகள்
விதிமுறைகள்
வகுத்துள்ளன,
பின்பற்ற...
தவறும்போது
திசைமாறும்போது
திக்கற்றகாட்டில்
திகைக்க
விட்டதுபோல்
திண்டாட்டம்
ஆகிவிடும்.
கோபமும், வேகமும்
அன்பை
அழித்துவிடும்.
அகங்காரமும்
ஆணவமும்
அடக்கத்தை
அழித்துவிடும்.
ஐசுவரியமானது
அதை
உடையவர்களுக்கே...
கேடுண்டாகும்படி
சேகரித்து
வைக்கப்படுவதாம்...
(பிரசங்கி 5:13)
ஐசுவரியம்
நல்லாரையும்
நண்பரையும்
நம்மிடமிருந்தே
அகற்றிவிடும்.

கொலை, கொள்ளை,
கொடூர குணம் என
மனிதனையே
அழித்துவிடும்.
சகோதரரே...
உடல் பலம்
உள்ள வலிமை
உள்ளது என்று...
பலவீனரை
பலவந்தமாய்
சொல்லாலும்...
செயலாலும்...
துன்புறுத்துவது
தகாத செயலே...பின்பு
பட்சதாபப்படுவதில்
பயன் இல்லை
பலரும் பலவிதம்...
பாவங்கள் செய்து
படுகுழியில்
விழுவோரோடும்
பக்கபலமாய் இருந்து
பரிதாபத்துக்குரியவர்.
பிரியமானவரே...
இப்படிப்பட்ட
இழிச்செயலுக்கு
இனியும் ஆளாகாமல்...
தினமும் வேதத்தில்
பிரியமாயிருந்து,
ஜெபம், தவம்
செய்வதோடு...
தானமும் தர்மமும்
தளராது கொடுத்தல்,
புனிதர் இயேசு
புகழ்பாடுதல்
இவையாவும்

நாமும்
சுத்தவானாக
சித்தமாகும்
அன்பரே...
உலக
மாயையிலிருந்து
விலகி
இயேசுவை
வணங்காது
வாழ்ந்தால்...
எவராலும்
எதையும்
சாதிக்கமுடியாது.
ஆக...
இயேசுவிடம்
அடைக்கலம்
புகுங்கள்
உங்கள் மேல்
நீதியின் சூரியன்
உதிக்கும்,
நிதமும்
நிம்மதியாய்
நீடித்து
வாழ்வீர்கள்!!!
மனம் ஆழ்ந்த
அமைதிபெறும்.
நல்லெண்ணமும்
நற்செயலும்
சுத்தவானாகக்
காத்துக் கொள்ளும்.
இயேசுவிடம்
இணைந்த
பக்தியும்
ஒருபோதும்
வீணாகப்போவதில்லை.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# மலைப்பிரசங்கம்

அலைபாடுங் கடலும்
வலைபோடுந் தொழிலும்
நிலையோடும் நிறைவோம்
தலைதூக்கும் கலிலேயம்

கடலோரம் தொடுதூரம்
நடமாடுந் தெய்வம்
கடல்நீரும் தொட்டோடும்
இயேசு பாதம்

ஓயாத அலையும்
ஒளியாத நுரையும்
காயாத வலையும்
கையாலே பழுதுநீங்கும்

நெடுங்கடல் தொடுங்கரையில்
உடலுழைப்போர் குடும்பத்தார்
படும்பாட்டைப் படம்பிடித்தார்
நேசர் இயேசும்

வலைஞருள் கலைஞரைத்
தெரிந்து கொண்டார்
பலசீடர் நிலைப்பாடுந்
துலங்கக் கண்டார்

மீன்பிடியரை மனிதப்
பிடியராய் படிமாற்றினார்
மீன்பிடியில் தான்பிடியை
விட்டோர் சீடரானார்

வலைப்பழுதை விலக்கியவர்
மனப்பழுதை விலக்உவார்
நிலைத்துஅதைத் துலக்குவதால்
தலைப்பணியாய்ப் பாவிப்பார்

குட்டி நாட்டை
முட்டிக் கேட்டு
கிட்டுத் திரட்டி
மனித வெள்ளம்

அலையெனத் தலையெலாம்
தொலைதூரம் பலகாண
மலைமேல் இயேசு
உதிர்த்தது சத்துவித்து

மலைப்பொழிவுக் கலைமழையில்
மூழ்கியது சீடர்அன்றாம்
மலைப்பிரசங்கம் நலப்பிரசங்கம்
தலைப்பிரசங்கம் ஆகுதுஇன்று!

ஆதாரம் : மத்தேயு 4-5
கவிதை எண் : 239
கவி புனைவு : மணிமுத்து.

# திருச்சபை ஜெபநாள் 04-07-2021 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடும்,
என் தியானத்தைக் கவனியும்." சங்கீதம் 5:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- திருச்சபையின் எல்லாவிதமான ஊழியங்களும், ஆலய ஆராதனைகளும் Team Meeting online மூலம் சிறப்பாக நடைபெற கிருபை புரிந்த கர்த்தருக்கு நன்றி கூறுவோம்.
- சிறப்பாக திருச்சபையில் 3 ஆண்டுகள் இறைபணியாற்றி தாயகம் திரும்பியுள்ள Rev.Victor Premkumar ஐயா அவர்கள் குடும்பத்திற்காக நன்றி கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- கொரோனா பாதிப்புகளிலிருந்து கர்த்தர்தாமே யாவரையும் பூரணமாய் விடுவித்து பாதுகாத்து நடத்திட தொடர்ந்து ஜெபிப்போம்.

"...கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை
எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்." சங்கீதம் 4:6(b)

**நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

# எல்க்கானா - அன்னாள்

ஒரு தேசத்தின் வெற்றி அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு சமுதாயத்தின் வெற்றியைப் பொறுத்தது. ஒவ்வொரு சமுதாயத்தின் வெற்றி அங்குள்ள குடும்பங்களைப் பொறுத்தது. இஸ்ரவேல் என்னும் தேசம் தேவவசனம் இல்லாமல், கர்த்தருடைய தரிசனம் இல்லாமல் இருண்டுக்கிடந்த நாட்களில் எல்க்கானாவின் குடும்பம் இஸ்ரவேலிலே திரும்பவும் பிரத்தியட்சமான தேவ தரிசனத்தைக் கொண்டு வந்தது.

### 1. அன்பான குடும்பம்:

எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்தி பெயர் அன்னாள். இன்னொருத்தி பெயர் பெனின்னாள். அன்னாளுக்கோ பிள்ளைகளில்லை. இப்படிப்பட்ட நிலையில் கணவன்மார் மனைவியைக் குறைகூறுவது உண்டு. மனதில் புண்படும்படி குத்திப் பேசுவதும் உண்டு. மாறாக எல்க்கானாவோ தன் மனைவியினிடத்தில் மிகுந்த அன்புள்ளவனாக இருந்தான். அவளுக்கு இரட்டிப்பான நன்மைகளைச் செய்தான். மற்றவர்கள் அவளை மனவடிவாகப் பேசினபோது, அன்னாளே அழாதே, பத்துக் குமாரரைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்று ஆறுதலாகப் பேசினான். கணவன்மார் தங்கள் மனைவியிடம் உண்மையான அன்பும், பாசமும் உடையவர்களாய் இருக்கவேண்டும். அன்பு வார்த்தையிலும் செயலிலும் நிச்சயம் வெளிப்பட வேண்டும்.

### 2. பக்தியுள்ள குடும்பம்:

தேவனை வணங்க சிரத்தை எடுத்துக் கொண்ட மனிதன் எல்க்கானா. வருஷா வருஷம் தேவாலயத்திற்குக் குடும்பத்தோடு சென்று பலியிட்டு தேவனை ஆராதித்து வருவார்கள். பிரயாண வசதிகள் இல்லாதக் காலத்தில் அவர்கள் வாழ்ந்த மலை தேசத்திலிருந்து சீலோவிற்கு பலிப் பொருட்களுடன் சென்று ஆராதிப்பது சிரமம்தான். தேவ தரிசனமில்லாத தேவாலயம், மனுஷர் கர்த்தருடைய காணிக்கையை வெறுப்பாய் எண்ணுமளவு ஆசாரியனாகிய ஏலியின் குமாரர் சுயநலவாதிகளாகவும், பெருந்தீனிக்காரராயும், விபச்சாரக்காரராயும் இருந்த காலம். ஆனால் எல்க்கானா குடும்பம் தேவ நியமப்படி ஆராதிக்கச் செல்கிறோம் என்ற உணர்வுடன் சென்றபடியால் இவைகள் அவர்களைத் தடுக்கவில்லை. தேவன் மனிதனைப் படைத்ததின் முக்கிய நோக்கம் அவரை ஆராதிக்கவே எனபதை அறிந்திருப்பவர்கள் எந்த இடர்ப்பாடுகளிலும் அவரை ஆராதிக்க முடியும்.

### 3. ஜெபிக்கும் குடும்பம்:

நாம் ஜெபிக்கும் ஜெபத்தைப் பொறுத்து தான் நாம் உலகத்தின் மீது ஜெயம் கொள்வது அமையும். இதை நன்றாக அறிந்த தேவ சமூகத்துக்குச் சென்ற அன்னாள் கர்த்தருடைய சமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். மட்டுமல்லாது, தேவ பிரசன்னமோ, தேவ போதனையோ இல்லாத இடத்தைப் பார்த்து "தேவரீர்... ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்" என்று பொருத்தனை பண்ணி ஜெபித்தாள். தேவனோடு தீர்மானம் பண்ணி, தேவ திட்டத்தோடு இணைந்து ஜெபித்தாள். பிள்ளைக் கிடைத்தவுடன் துதிபாடலையும் அவர் பாதம் காணிக்கையாக சமர்ப்பித்தாள். வாழ்க்கையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலிருக்கும்போது சோர்ந்து போய்விடாமல் ஊக்கமாக விசுவாசத்துடன் ஜெபிக்க வேண்டும்.

### 4. பொருத்தனையை நிறைவேற்றிய குடும்பம்:

இஸ்ரவேலர் கர்த்தருக்கு முன்பாக செய்த பொருத்தனைகளை நிறைவேற்ற கவனமாக இருக்கவேண்டும் என்று கர்த்தர் வெளிப்படையாகக் கட்டளையிட்டிருந்தார். திருமணமானவள் செய்த பொருத்தனையை அவளுடைய புருஷன் தடுக்கலாம். (எண் 30:6-8). ஆனால் எல்க்கானாவோ தனது மனைவியுடன் தேவ திட்டத்தில் இணைந்து அவருடைய ஊழியத்திற்கென்று தனது மகனை ஒப்புக் கொடுத்தான். இருவரும் இணைந்து பொருத்தனை பண்ணினபடியே சாமுவேலை சிறு பையனாக இருக்கும்போதே தேவனுடைய சேவைக்காக ஆலயத்தில் கொண்டு போய் விட்டனர். வருடம் ஒரு தடவை மட்டும் அவனைப் பார்த்து வந்தது அவர்களுடைய அர்ப்பணிப்பையும், உறுதியையும் காட்டுகிறது. கர்த்தர் மாறாதவர். பிள்ளையில்லாமலிருந்த அவளுக்குக் கர்த்தர் பிள்ளையைக் கொடுத்தபோது, அவனை தன்னுடன் வைத்துக்கொள்ள விரும்பி இருப்பாள். ஆனாலும் கர்த்தருக்கு வாக்குக்கொடுத்த பொருத்தனையை நிறைவேற்றுவதில் உண்மை உள்ளவளாயிருந்தது போல, நாமும் கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதிலளித்தப்பின் வாக்களித்த பொருத்தனைகளை நிறைவேற்றவேண்டும்.

தன் மகனை கர்த்தர் பணிக்குக் கொடுத்த அன்னாள், எல்க்கானா தம்பதிகளுக்கு கர்த்தர் இன்னும் பல பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார். சாமுவேல் சிறு வயதிலேயே தேவ சமூகத்தில் வளர்ந்தான். தேவ அழைப்பை நேரடியாகப் பெற்றான். தேவனுடைய தீர்க்கதரிசி என்று தேசம் முழுவதும் பெயர் பெற்றான். ராஜாக்களை அபிஷேகம் பண்ணும் சிலாக்கியம் பெற்றான். கர்த்தர் தந்த குடும்பத்தை நம்முடைய ஜெபத்தினால், நேர்மையினால், நீதியினால், தியாகத்தினால் நடத்த வேண்டும். இருண்ட சமுதாயத்தில் தேவனது திட்டத்தை நிறைவேற்ற, தேவனது ஒளியைப் பெற்று கலங்கரை விளக்காக நமது குடும்பம் திகழ கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

இனிதா மோசஸ்.

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(நெகேமியா 1-13)

கீழ்கண்ட வினாக்களுக்கு நெகேமியா 1-13 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. அநேகரைப்பார்க்கிலும் உண்மையுள்ளவனும், தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்தவன் யார்?
2. நாங்கள் ................ கட்டிவந்தோம், .................... பாதிமட்டும் ஒன்றாய் ..................... உயர்ந்தது, ஜனங்கள் ........................ ஆவலாயிருந்தார்கள். நிரப்புக.
3. நீங்கள் செய்கிற இந்த காரியம் என்ன என்று கேட்டவர்கள் யார்?
4. ஜனங்கள் எல்லாரும் எங்கே ஒருமனப்பட்டுக் கூடினார்கள்?
5. நான் பெரிய வேலையைச் செய்கிறேன், நான் வரக்கூடாது என்று கூறினவர்கள் யார்?
6. எலியாசிப் என்பவர் யார்? செய்த தவறு என்ன?

   வசனங்கள் குறிப்பிடுக.
7. துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்த்தவர் யார்?
8. எலூல் மாதம் இருபத்தைந்தாம் தேதி குறிப்பிடுக.
9. இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள் என்று கூறினவர்கள் யார்?
10. ராஜாவின் வனத்துக் காவலர் பெயர் குறிப்பிடுக.

Bro.I.சைமன்,
சபை ஊழியர்.

## June 2021 வேதவினா போட்டிக்கான சரியான பதில்கள்

1. எஸ்றா 4:7-10, 23
2. மித்திரேதாத், யூதாவின் அதிபதி - சேஸ்பாத் எஸ்றா 1:8
3. தரியு ராஜா, ஆறாம் வருஷம் - ஆதார் மாதம், மூன்றாம் தேதி எஸ்றா 6:15
4. கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தத் தொடங்கினார்கள் எஸ்றா 3:6
5. அர்தசஷ்டா ராஜா, தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால். எஸ்றா 7:6
6. ஆகாய், சகரியா எஸ்றா 5:1
7. பெர்சியாவின் இராஜாவாகிய கோரேஸ் எஸ்றா 1:1,3
8. எஸ்றா எஸ்றா 7:10
9. தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லாருடைய மேலும் நன்மையாக இருந்தது. எஸ்றா 8:22
10. வம்சங்களின் தலைவர்களில் சிலர் அறுபத்தோராயிரம் தங்கக்காசையும், ஐயாயிரம் ராத்தல் வெள்ளியையும், நூறு ஆசாரிய வஸ்திரங்களையும் கொடுத்தார்கள். எஸ்றா 2:68-69

## June 2021 வேதவினா போட்டி சரியான பதில் எழுதியவர்கள்

1. திருமதி. அனித்தா ஆல்வின்
2. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
3. திருமதி. பொன் டாப்னி ஜான்சன்
4. திரு. V.மோகன்
5. திருமதி.இனிதா ஜோனா
6. திருமதி. ரீட்டா ஸ்டீபன்
7. திருமதி. டெய்சி துரை
8. திருமதி. செல்லா ஆலன்
9. திருமதி. மெர்லின் விஜில்
10. திருமதி. பெமி டார்வின்
11. திருமதி. ஷாமினா பென்னி
12. திருமதி. ஆன்றோ சுமேஷ்

# தெரிந்து கொள்வோம்

## மிஷனெரிகள் பகுதி 92

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் - மத்தேயு 9:37**

### Rev.Dr.ஹெர்மன் ப்ரட்ரிக் மாக்லிங்



Rev.Dr.ஹெர்மன் ப்ரட்ரிக் மாக்லிங் அவர்கள் 1811-ம் ஆண்டு மே மாதம் 29-ம் நாள் ஜெர்மனி நாட்டில் உள்ள பிராக்கன்ஹெய்ம் என்ற ஊரில் பிறந்தார். டுப்பிங்கன் பல்கலைக்கழகத்தில் இறையியல் கல்வி கற்று பட்டம் பெற்றார். பின்னர் பாசல் மிஷனெரி ஸ்தாபனத்தில் சேர்ந்து மிஷனெரி ஆனார். 1836-ம் ஆண்டு பாசல் மிஷனெரியாக கர்நாடகாவில் உள்ள மங்களூர் பகுதியில் வந்து சேர்ந்தார்.

கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க மிஷனெரியாக வந்த மாக்லிங் அவர்கள் கன்னட மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க கன்னட மொழியைக் கற்றுக்கொண்டார். இதன் மூலமாக கன்னட மக்களுக்கு சுவிசேஷத்தை எளிமையாக எடுத்துரைத்தார்.

மங்களூரில் உள்ள மக்களுக்கு அவர்கள் சொந்த மொழியில் செய்திகளைப் பரப்பும் நோக்கத்துடன் கன்னட செய்திகளை வெளியிட முடிவு செய்தார். அவரது முயற்சியால் 1843-ம் ஆண்டு ஜூலை 1-ம் நாள் முதல் இதழ் "மங்களூரா சமாச்சாரா" பத்திரிக்கை வெளியானது.

1853 முதல் 1858-ம் வருடம் வரை கோட்டு மாவட்டத்தில் தங்கியிருந்து அங்குள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார். 1848-ம் ஆண்டு 3000-க்கும் மேற்பட்ட கன்னட பழமொழிகளின் பட்டியலை கன்னட மொழியில் வெளியிட்டார். பின்னர் கர்நாடகத்தைப் பற்றிய ஆரம்பகால வரலாற்றுப் புத்தகங்களில் ஒன்றான கூர்க் மெமாயர்ஸ் என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

1847-ம் ஆண்டு பாஸ்ல் இவாஞ்சலிக்கல் மிஷனெரி சொசைட்டியால் நிறுவப்பட்ட BEM இறையியல் கல்லூரியின் அதிபராக ஹெர்மன் மாக்லிங் பணியாற்றினார். கர்நாடகா மற்றும் மலபார் பகுதிகளில் உள்ள பிராடஸ்டன்ட் தேவாலயங்களுக்கு, குருவானவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இந்த இறையியல் கல்லூரி நிறுவப்பட்டது. 1965-ம் ஆண்டு யூனியன் கனரேஸ் செமினரியுடன் இணைக்கப்பட்டு இன்று கர்நாடக இறையியல் கல்லூரியாக செயல்பட்டு வருகிறது.

1853-ம் ஆண்டு கூர்க்கில் முதல் பிராடஸ்டன்ட் தேவாலயத்தையும், 1855-ம் ஆண்டு அங்கு ஒரு பள்ளிக்கூடத்தையும் உருவாக்கினார். 1858-ம் ஆண்டு டுபிங்கன் பல்கலைக்கழகம் ஹெர்மன் மாங்லின் அவர்களின் "பிப்லியோதெக்கா கர்நாடகா" என்ற படைப்பிற்காக மாக்லிங் அவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது.

ஜூலை 1-ம் நாள் மங்களூரு சமாச்சாராவின் முதல் இதழ் வெளியான நாள் நினைவாக கன்னட பத்திரிக்கை தினமாகக் கொண்டாடப்படுகிறது. 2011-ம் நாள் மாக்லிங் அவர்களின் 200-வது பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக அவரது திருஉருவச்சிலை அமைக்கப்பட்டது.

Rev.Dr.ஹெர்மன் ப்ரட்ரிக் மாக்லிங் அவர்கள் தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை இந்தியாவில் உள்ள கர்நாடகா மாநிலத்தில் ஊழியம் செய்து, மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவித்து, அங்குள்ள மக்களுக்குக் கல்வி அறிவை வளர்த்து, கன்னடமொழி மற்றும் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தார்.

Rev. ஹெர்மன் தன்னுடைய இறுதி நாட்களை ஜெர்மனியில் தங்கி ஊழியம் செய்து வந்தார். 1881-ம் ஆண்டு இறைவன் கரங்களில் தன்னுடைய ஆவியை ஒப்புவித்தார்.

R.ஜெபர்சன்

## NEW MEMBERS

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Kendric Prem Daniel Selvaraj | 2907 | Fujairah |
| 2 | Mr. Dinesh Kumar | 2908 | RAK |
| 3 | Mr. Nelson Sathya Jeyakumar | 2909 | Fujairah |
| 4 | Mr. Benjamin Paul Devapitchai Sundar Singh | 2910 | Dubai |
| 5 | Miss V.G. Ebisha Faith | 2911 | Dubai |

# HEALTH TIPS

## Preventing Urinary Tract Infections during the Summer Seasons

Summer is a peak season for urinary tract infections (UTI), and the chances of having a bladder infection are 46% higher during the summer months. This is mainly due to the fact that many people experience dehydration during the summer, which is a major predisposing factor for UTIs.

Dehydration during the summer months provides the perfect opportunity for bacteria to grow and thrive in your bladder, causing urinary tract infections. If you notice that you are not going to the restroom as frequently or if your urine is dark-colored, then you probably are dehydrated.

### Tips on how to prevent Urinary Tract Infections

Here are some ways to prevent summer dehydration and urinary tract infections, and urinary tract infection treatments:

Drink plenty of water daily: Drinking water prevents dehydration, so it is recommended that you drink around 8-ouce glasses or 2 liters daily. The amount of water recommended to consume may increase depending on the engagement of activity or exposure to hot environments.

Cut down on caffeine: Caffeine is known to cause bladder irritation, and as a result, may worsen the symptoms associated with a urinary tract infection.

Avoid sugary food and drinks: This is also similar to caffeine. Sugar may also cause bladder irritation, and may aggravate the symptoms associated with a UTI.

Re-hydrate often especially after exercises or periods of intense heat: Exercise and prolonged exposure to intense heat will cause dehydration, so it is best to prepare and carry a cold water bottle refreshment around with you to avoid such problems.

Boost your immune system: A weak immune system is vulnerable to pathogen attack. Strengthen your immunity with immune strengthening herbs, foods rich in vitamins, minerals to combat the recurrent bladder infections.


Drink cranberry juice (the 100% juice kind, not the cocktail flavored, which is mainly sugar water). It was initially believed that drinking cranberry juice helps reduce the risk of UTIs but recent studies show that cranberry juice, or cranberry products (such as tablets or capsules) are not really helpful. However, drinking cranberry juice will help with keeping hydrated and can assist with UTI discomfort, but they should never be used as a form of treatment or a substitute for antibiotics.

Urinate when you have the urge to do so and do not hold your urine for a prolonged period. Holding in urine when you need to urinate allows bacteria to build up in your bladder, so the longer you hold your urine, the higher the chance you will ultimately succumb to a UTI.

### When to Seek Immediate Medical Attention

Seek medical attention immediately if you experience any of the following symptoms:

- Pain or burning when you urinate
- Bleeding while urinating - pink, rose, or red urine
- Urge to urinate frequently but only passing small amounts of urine
- Pain or feeling of heaviness in your lower abdomen
- Foul-smelling or cloudy urine
- Fever and chills
- Nausea or vomiting
- Constant severe pain in the back just below the rib cage or on one side of the body




Most urinary tract infections are bladder infections and are usually not serious if treated right away. However, if left untreated, they can spread to kidneys and can lead to kidney infections, which can cause serious, permanent, and irreversible damage if not treated promptly.

Stay Hydrated by the living water

But those who drink of the water that I will give them will never be thirsty. The water that I will give will become in them a spring of water gushing up to external life. John 4:14.

Selvakumari Babu

# வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்

Mrs. Sheeja Rejison அவர்களின் தாயார்

Mrs. Stella Darling Selistus அவர்கள் கடந்த 02-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mr. C.Jeyasingh அவர்களின் தாயார்

Mrs. Ratnabai Chellam அவர்கள் கடந்த 02-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mrs. Lydi Jebakumar அவர்களின் தாயார்

Mrs. Kethsi Prasad அவர்கள் கடந்த 03-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mrs. Ruth Anitha Anand Samson அவர்களின் தாயார்

Mrs. Esther Chandrika அவர்கள் கடந்த 05-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mr. Johnson Daniel Raj அவர்களின் தாயார்

Mrs. Rani Priscilla அவர்கள் கடந்த 09-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mr. Billy Joseph அவர்களின் தகப்பனார்

Mr. Michael Antony அவர்கள் கடந்த 22-06-2021 அன்றும்

நமது சபை அங்கத்தினர்

Mr. Johnson Daniel Raj அவர்களின் தாயாருடைய சகோதரி

Mrs. Florence Devadas அவர்கள் கடந்த 26-06-2021 அன்றும்


கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

There are at least two people in the Bible named Nadab. One was a son of Aaron and the other was a King Nadab. Nadab ruled the kingdom after his father passed away. There was an old saying in Israel even in the days of Nadab that, "The fathers have eaten sour grapes, and the children's teeth are set on edge? (Ez 18:2)"  The rise and fall of Nadab correspond with this saying very much, in that before he even sat on the throne as a king, his doom was waiting on him.

*This month kids' corner concentrates on DIVIDED KINGDOM – KING NADAB (2ND KING OF ISRAEL) 1 KINGS 15:25-31. Answers should have reference.* ***Read, Search, Write.*** *Follow NKJV.*

**LEARN SOMETHING NEW :** GIBBETHON : A Philistine city assigned to Dan (Josh 19:44) and to the Levites (21:23). The city (modern Tell Melat) was an important fortress on the eastern branch of the Way of the Sea, the route used by Thutmose III in his Syrian campaigns, and by Esarhaddon in his attack on Egypt.



**Grade 3 to Grade 5**

## NADAB'S TALK SHOW:


















GRADE 6 AND ABOVE

# MY BIBLE STUDY ON KING NADAB

Passage of Scripture

1) WHAT DOES THE PASSAGE OF SCRIPTURE 2 CHRO 11:14 CONVEYS?

3) In Which year of King Asa's reign, King Nadab came to rule in north?

4) In which year of King Asa's reign, Baasha killed Nadab?

Theme

2) Was Nadab a good king? Justify your answer with reason and reference.

8) What was the reason for God's anger?

Interesting Cross Reference

7) 1 KINGS 14:14 DO YOU THINK the text in this verse fulfilled? How?

5) Who is Baasha?

6) Where was Nadab killed and where?

Questions I have

11) What rating of stars do you give for Nadab's life?

☆☆☆☆☆

9) What thoughts that pops out in your mind about the burial that Nadab would have got?

Thoughts that Pop Out

10) How would have Nadab live differently?

**Priya Singh (Please send your answer to the pastor by 15th of this month)**

## Answers for the month of June 2021 (DIVIDED KINGDOM - ASA (3RD KING OF JUDAH) PART 2 - 1 KINGS 15TH CHP, 2 CHRO 14TH CHP, 15TH CHP, 16TH CHP)

**GRADE 3 TO GRADE 5 SEE KING ASA THROUGH TELESCOPE AND WRITE ABOUT THE EVENT RELEVANT TO THE PICTURE INSIDE THE CIRCLE.** I) 2ND WAVE OF ASA'S REFORMS

1) He removed the abominable idols.
2) He removed the idols from the cities which he had taken in the mountains of Ephraim.
3) He restored the altar of the LORD.
4) He removed all the idols that his fathers had made.
5) Asa cut down her obscene image and burned it by the Brook Kidron.

II) Asa sent silver and gold from the treasuries of the house of the LORD and of the king's house to Ben-Hadad king of Syria. (2 CHRO 16:2)

III) King Asa carried away the stones and timber of Ramah, which Baasha had used for building and with them he built Geba and Mizpah. (2 CHRO 16:6)

IV) Asa was angry with Hanani, and put him in prison. (2 CHRO 16:10)

V) In the 39th year of Asa's reign, Asa became diseased in his feet. He had 2 years of severe disease in his foot. (2 CHRO 16:12, 1 KINGS 15:23)

VI) Asa died in the 41st year of his reign. They laid him in the bed which was filled with spices.They buried him in his own tomb, which he had made for himself in the City of David. (2 CHRO 16:13-14, 1 KINGS 15:24)

**GRADE 6 AND ABOVE MY BOOK REPORT ON KING ASA:**

1) Solomon's great great grandson.
2) a) He removed the abominable idols.
   b) He removed the idols from the cities which he had taken in the mountains of Ephraim.
   c) He restored the altar of the LORD.
   d) Asa banished the perverted persons from the land.
   e) He removed all the idols that his fathers had made.

f) Asa removed Maachah his grandmother from being queen mother, because she had made an obscene image of Asherah.
g) Asa cut down her obscene image and burned it by the Brook Kidron. (2 CHRO 15:8-9, 16, 17, 1 KINGS 15:12-14)

3) a) To seek the LORD God of their fathers with all their heart and with all their soul.
b) Whoever would not seek the LORD God of Israel was to be put to death, whether small or great, whether man or woman. (2 CHRO 15:10-15)

4) In the 36th year of the reign of Asa, Baasha king of Israel came up against Judah and built Ramah.

5) a) Hanani the seer came to Asa king of Judah said, when Ethiopians and the Lubim came with huge army and many chariots and horsemen you relied on God. And God gave the victory.
b) But When Baasha came against you instead of relying on God you relied on King of Syria. Therefore from now on you shall have wars. (2 CHRO 16:7-9)

6) a) Asa sent a message to Ben Hadad to break the treaty with Baasha king of Israel, so that he will withdraw from him.
b) Syrian king accepted the gold and silver sent by King Asa.
c) Ben-Hadad heeded King Asa, and sent the captains of his armies against the cities of Israel. (1 KINGS 15:19-20(A), 2 CHRO 16:3- 4 (A))

7) a) In the 39th year of Asa's reign, Asa became diseased in his feet.
b) He had 2 years of severe disease in his foot.
c) Though he had severe foot pain he did not seek the LORD, but the physicians. (2 CHRO 16:12, 1 KINGS 15:23)

8) a) Asa died in the 41st year of his reign.
b) They laid him in the bed which was filled with spices.
c) They buried him in his own tomb, which he had made for himself in the City of David. (2 CHRO 16:13-14, 1 KINGS 15:24)

9) Asa reigned 41 years in Judah.

10) Jehoshaphat his son reigned in his place. (4th king of Judah)

11) Trusted the strength of Syrian king which was a failure.

Asa shows us the tragedy of a man who rules well and seeks the LORD for many years, yet fails in a significant challenge of his faith and then refuses to hear God's correction.

He struck out against not only Hanani, but also against others who were committed to God and could see the error of the king's ways. Asa became diseased in his feet, and it was severe yet in his disease he did not seek the LORD, but the physicians.
Asa had a great beginning but failed to end it in the same way.

12) They offered to the LORD at that time 700 bulls and 7000 sheep from the spoil they had brought. They rightly recognized that their victory came from God, so they gave back to Him from the spoil of the victory over the Ethiopians. (2 CHRO 14:12-15)

## Last months Childrens Corner prize winner

**Correct answer Participants:** **GRADE 3 TO GRADE 5** 1) Sarah Arul 2) Tiana 3) Mark **GRADE 6 TO GRADE 8** 1) Sanjay Sumesh 2) Hannah 3) Jaymie Joseph 4) Trinita 5) Jenica Roshan **GRADE 9 AND ABOVE** 1) Maisie Fedora 2) Alston Samuel 3) Gracelin Esther 4) Karen Singh 5) Joel Sumesh

**Last month May 2021 :** **GRADE 9 AND ABOVE** 1) Karen Singh 2) Nickolyn Nixon

**Good attempt Participants:** **GRADE 6 TO GRADE 8** 1) Jerson



# BIRTHDAY CELEBRANTS - JULY 2021

## DUBAI

1 Mr. Samnath Manimuthu
1 Mr. J.Julian Sudharshan
1 Mr. J.Catherine Simson
1 Mrs. Juliet Jeyanthi Godwin
1 Mr. Cyril P. Doss
1 Miss Adin Yesurajan
1 Master Nathaniel Kiruba Kitson
2 Mr. S.Jeba Singh
2 Mrs. Josephine Percy Wesley Paul
2 Mr. M.Godwin
2 Miss Edliyn Risshona Manuel Subin
2 Miss Jolita Navis Grace Ranjith
2 Mrs. Esther Adlin Prema Retna Singh
2 Miss A. Angellica
2 Mr. Cherubin Ebenezer
3 Mrs. Nickita Keziah Abishek Richard
3 Mrs. Beatrice Christobel Raja Retnam
3 Mrs. Gold Sheeba Peter Gnanasigamony
3 Mr. Pradeep Kumar V.C.
4 Mrs. Vanitha Jasmine Jeba Singh
4 Miss Karis Glenna Sam Kingston
4 Miss Albina Joan John Primson
4 Mr. J.Francis Ebyneel
5 Master Geoffrey Chris Hemanth
5 Mr. Moses Gnanamuthu
5 Mrs. Rajini Benjamin
5 Mrs. Rojini Jebakumar
5 Mrs. Simie Gold Gebin J. Oliver
5 Master David Houston Bethelraj
5 Mr. Samrobin A.S.
5 Miss Magdalene Nixon
5 Miss Judith Lillian Ranjith Singh
5 Mr. Graceson Samuelraj
6 Mr. M.Samuel Theodore
6 Master Calvin Godwin Martin
6 Master Haniel Samuel Theodore
6 Miss Jeffry J.Adriyana Jayaseelan George
6 Master Griffin Meister Stalin Prabhu
6 Mrs. Sherlin Sophia Augustin
7 Mr. M.Uthama Devan
7 Mrs. Evelin George
7 Miss Riyanna Doss Prabahar
7 Mrs. Genna Bhai Daniel
7 Mr. S.Gladson Lovely
7 Mrs. Roslin Vijaya Johnson
7 Miss Jenifer Koil Dhasan Paul Durai
8 Master Daniel Alexander David
8 Miss Ferlin Christina Kingston Jose
9 Mrs. Sangeetha Asbin Greever

9 Mrs. Sweetie John Sampath Kumar
9 Mrs. Reeta Anto
10 Mrs. Irene Sophia Johnson
10 Miss Sandra Susanna Samuel
10 Miss Karan Sneha Premkumar
10 Miss Denisha Daniel
10 Miss Jennifer Angeline Joseph Dominick
10 Master Ethan Joshua Durairaj
11 Mr. Auswin Godwin
11 Mr. R.Christopher Johnson
11 Master Joshua Ivan Cornelius
11 Mr. J.P.David Rajan
11 Miss Angelina Miraclin Jayaseelan
11 Mr. Jegan Raj P.
12 Mr. Sean Anderson Thangaswami
12 Mrs. Christella Thangalet Thangaswami
12 Dr. T.S.Manoj Kumar
12 Mrs. Malini Priscilla Hani Babu
12 Mr. Livingstone Solomon
12 Miss Tania Krista Larissa Vijai
12 Miss Stefina Mathew Arulraj
12 Miss Deborah Mercylin David
12 Mrs. Anitha Christy Arul Raj
12 Miss Sarindra Ykia Rajesh Amirtham
12 Mr. T.Selva Sam Daniel
13 Mrs. Sheryl Sidharth Dhas
13 Mrs. Ezhil Raja
14 Mr. Raja P.
15 Mr. J.Jeberson
15 Mrs. Leona Smilyn Manoj Kumar
15 Mrs. Sathya Martin Wins
16 Master Alston Samuel Alwyn
16 Miss Sandra Sharon Stephen
16 Mr. Y.John Solomon
16 Master Naolin Nepolean
16 Mr. J.Jebaraj Johnson
16 Mrs. Sherla Lazar
16 Mrs. J.Lydia
17 Miss Sumitha Keren Lesley Sampath Kumar
17 Miss Binia Baktha Seelan
17 Miss Anbu Preetha Manuel Jebaraj
17 Mr. T.Jenittan Samuvel
17 Mr. Ajay Jobin John Kennedy
18 Mr. M.Vincent Jaya Kumar
18 Miss Stefna Silas
19 Mr. W.Ebenezer
19 Mrs. Jessie Priscilla Roopa Joy
19 Mr. T.Jebastine Kingsley Daniel
19 Miss Christeena Grace Micheal
19 Mr. Jebin J
19 Miss Sharina Sunil Kumar
20 Master Ashish Daniel
20 Mr. Jernaus Britto
20 Miss J.C.Catherine Chris

20 Miss Katelyn Janet Sathish Paul
20 Mr. Festus Steve Dinakaran C.
20 Mr. S.Sundar Singh
21 Miss Catherine Jasmine Manoj
21 Mr. D.Robert Joshi
22 Miss Bibisha Sharon Bright
22 Mrs. Janet Cynthia Herold Patrick
22 Miss Jerioth Stephen Immanuel
22 Miss Jenisha Jeyadhas
22 Master Judah Manuel
22 Master Michael Charles
22 Miss Nesika Chriselle Martin
23 Mr. S.Sunder Raj
23 Mrs. Divya Praba Allen
23 Mr. Suresh Viswanathan
23 Mrs. Reena Jose Albin
23 Mr. Rajesh Amirtham
23 Mrs. Jane Carol Rajan
24 Miss Shauna Samson Rajan
24 Mr. J.Rejisan Nayagam
24 Miss Julita Jemi Justin
24 Mr. P. Paul Livingston
25 Mr. V.Sam Kingston
25 Mr. Stephen T. Jebadurai
25 Master Abriyd Benzion Shajan Abrain Raj
25 Miss Laura Jane Dinesh Xavier
26 Mrs.Suguna Thangamani
26 Miss Geona Jeya Seelan
26 Master Anto Jaden Arun Raja
26 Mrs. Sylvia Jens Daniel
27 Miss Blassy Joel Jesus Bosco
27 Master Rijo Jeyan Peter Thomson
27 Master Lijo Sam Peter Thomson
28 Master Joel Jebaraj
28 Mr. P.Lazar
28 Mrs. Jayanthi Lazar
29 Mrs. Priyadarsini Priyachand
29 Miss Asmita Jayasingh
29 Mrs. Sophia John Dennis
29 Master Jeremiah John Gnanamuthu Prabhu
29 Mr. Sumesh
29 Mr. Nelson Arul Raj P
30 Mrs. Rini Elizabeth Fredrick
30 Mr. J.Kingson
30 Mrs. Jaffrin Livingston
30 Master Jerson Cris Vijil Israel
30 Mrs. Lalith Esther Ravi Samuel
30 Mr. Joshin Alfred J
30 Mrs. Jenifer Godson David
30 Mrs. Prabha Jein C.S.Sunil Kumar
31 Master J.Bristo Josewin Isaac
31 Mr. R.Retna Singh

## FUJAIRAH

2 Miss. Onisha Nir Joe Joseph
4 Mr. James
4 Mr.D.Julion Jeba Singh
7 Master Joaline Johan Prince
8 Mr. J.Daniel Deva Asirvatham
10 Miss Jasmine Rubina Jason
11 Master Giftson Samuel Alphons
12 Master Jebaline Christopher Prince
13 Mrs. S.Thamizharasi Ramesh Kumar
17 Master Japhino Joselin Christo
17 Mr. Regin David
22 Mr. S.Sam Reni Durai
25 Mr.Arul Chris Joe
27 Mrs. Bebin Merri Joe Jai Sam Daniel
27 Mr. Alvin Dominic Raj
27 Mr. I.David Pon Sekar
28 Mr. Star Jayaseelan
29 Master Benhin Joshua J.

## RAS AL KHAIMAH

1 Miss.Priya Jeya Chandran
1 Miss Irine Abisha Anantharaj
1 Mrs. Ramya Shine Aneesh
5 Mr.K.David Raja Selvan
6 Mr. Sathasingh T.
6 Mr. Pradeep Maria Stanislaus
6 Mr. Albin Jayaraj Selvaraj
7 Mr. D.Selva Nayagam
7 Mr. P.Pon Gnana Sahayam
8 Mr. S.Ebenezer
8 Master Andrew Peter Nelson Mathew
8 Mr. Breeze Mainson E
9 Miss Divya Dharshini Suresh
10 Mr. T.Joyson Arul
10 Master Josewin Vijayan
13 Mrs. Shilba Ranjana George Rajasingh
14 Mr. Joney Manoji
14 Miss Jesha Anish
15 Miss Angelin Blessy Nelson
16 Master Leor Mac Arthur Kamalesan
17 Mr. P.Vijayaraj
17 Master Arun Viju Muthu Nayagam
19 Mrs. Sangeetha Ujinraj Kanakaraj
20 Mrs. Paul Santhiya Kingsly Christhu Rajan
24 Mr. Vincent Jayapal
25 Mr. J.Johnson
25 Mr. C.Christopher
28 Mr. I.Anantharaj
28 Mr. A.David Sworna Balan
28 Mr. E.Arul Sigamani
29 Mrs. Irin Sujatha Ebi Paul Raj
30 Mrs. Raja Gnana Paul Reji Joyson
31 Miss Keren Deepthi Jacob Rajkamal
31 Mr. Justin Deva Kumar D.
31 Mr. Paul Stephen

## WEDDING ANNIVERSARY CELEBRANTS - JULY 2021

### DUBAI

2 Mr. & Mrs. T.Rajkumar
2 Mr. & Mrs. Ranjith Singh
3 Mr. & Mrs. J.Stalin Prabhu
4 Mr. & Mrs. David Rajan
4 Mr. & Mrs. Thomas Collins
5 Mr. & Mrs. V.Sam Kingston
5 Mr. & Mrs. B. Vivek Pandian
6 Mr. & Mrs. Das Kingsly
7 Mr. & Mrs. Das Prabhaharan
7 Mr. & Mrs. C.Wesley Paul
7 Mr. & Mrs. Anoop Johnson
8 Mr. & Mrs. T.Jebastine Kingsley Daniel
9 Mr. & Mrs. H.Rajasekar
9 Mr. & Mrs. C.Jeyakumar
10 Mr. & Mrs. Deva Thilak Pandian
10 Mr. & Mrs. M.Thangamani
10 Mr. & Mrs. Rajkumar M.
10 Mr. & Mrs. Gabriel Andrews
10 Mr. & Mrs. Jaison Paul A
11 Mr. & Mrs. Francis Jeyapaul
11 Mr. & Mrs. Russel Raj Antony
11 Mr. & Mrs. S.Arul Selva Pebin
12 Mr. & Mrs. Rajah Cornelius
12 Mr. & Mrs. Kasi Rajan
12 Mr. & Mrs. Daniel Francis
12 Mr. & Mrs. Kelvin S
13 Mr. & Mrs. Justin Devakumar
13 Mr. & Mrs. T.Mahiban
14 Mr. & Mrs. Suresh Singh Sekar
14 Mr. & Mrs. R.Jefferson
14 Mr. & Mrs. C.Anand
15 Mr. & Mrs. P.K.Rajesh
15 Mr. & Mrs. S.Raja Retnam
15 Mr. & Mrs. Samnath Manimuthu
15 Mr. & Mrs. R.Henry Vivian
15 Mr. & Mrs. S.Batrick Joshuva
16 Mr. & Mrs. Charles Spurgeon S.
16 Mr. & Mrs. Godson David
21 Mr. & Mrs. N.P.M.Caldwel

### FUJAIRAH


06 Mr. & Mrs. V.Prince Joe Finny
07 Mr. & Mrs. Nelson Sathya Jeyakumar
10 Mr. & Mrs. P.Selvaraj
11 Mr. & Mrs. N.Joseph
14 Mr. & Mrs. T.Pathrose
14 Mr. & Mrs. George Rathinasamy


### RAS AL KHAIMAH

4 Mr. & Mrs. Daniel Sathiyanathan
5 Mr. & Mrs. Vinoth Rajan Rajayyan
7 Mr. & Mrs. Sam Kamalesan
8 Mr. & Mrs. George Rose Ambrose
14 Mr. & Mrs. Baburaj Singh H.

## GOLD ROMAN COIN 12

The 11-year conservation process included replacing the water in the wood cells with a synthetic wax that penetrated the cellular cavities of the deteriorated timber.






## CEDAR AND OAK WOOD 10

The Jesus Boat had a rounded stern and a fine bow.Besides cedar planking and oak frames, five other woods were used: Aleppo pine, sidar, hawthorn, willow and redbud.Evidence of repeated repairs showed the boat had been used for several decades, perhaps nearly a century.

## 3 FOUND IN MUDDY LAKEBED

The Sea of Galilee yielded an unexpected catch in 1986 — the hull of a fishing boat old enough to have been on the water in the time of Jesus and his disciples.The remains of the so-called Jesus Boat were found in the muddy lakebed (the Sea of Galilee is actually a freshwater inland lake) during a time of severe drought.

## REPORT BY ISRAEL DEPARTMENT 8

Shelley Wachsmann, who as the Israel Department of Antiquities inspector of underwater antiquities was intimately involved in the excavation, says: "It does seem that the boat fits this time range and is of the type that would have been used by Jesus and his disciples."

## 5 THE ANCIENT GALILEE BOAT

Extracting it safely presented a huge challenge to excavators. Conservation of its waterlogged timbers then took 11 years.




In 2000 the vessel — officially known as "The Ancient Galilee Boat" — went on permanent display in the Yigal Allon Museum at Kibbutz Ginosar, near where it was discovered.

# How to make the Library Book

You can build up your own library with the books we give every month. Follow the instructions to make the book.

1. Fold along the dotted line in the centre.
2. Cut out along the dotted lines in the centre using scissors.
3. Then cut along the dotted lines you will get three rectangular parts.
4. Keep page 10 on top of page 8. Then keep page 12 over that. Likewise keep the other pages also.
5. Fix them together using staples. your Library Book is ready.





## 11 DAYS OF HARD WORK

Then, working around the clock for 11 days, excavators and volunteers released the Jesus Boat from its muddy surroundings and encased it in a polyurethane foam "straitjacket" to hold it together.In Shelley Wachsmann's words, the boat looked "somewhat like an overgrown, melted marshmellow" when it was floated to the shore and lifted by crane into a conservation pool.

## SIZE OF THE BOAT





The remains were 8.3 metres (27 feet) long, 2.3 metres (7.5 feet) wide and 1.3 metres (4.3 feet) high. This size would have enabled it to carry up to 15 people.



## TWO FISHERMEN BROTHERS WHO FOUND JESUS BOAT



Two fishermen brothers, Moshe and Yuval Lufan, both keen amateur archaeologists, stumbled across the oval outline of the buried boat. It was on the north-west shore of the Sea of Galilee, about 1.5km north of Migdal, the home of Mary Magdalene. The method of construction identified it as typical of ancient boats in the Mediterranean region. The planks of the hull were edge-joined with mortise-and-tenon joints held in place with wooden pegs.

## THE TYPE OF BOAT JESUS USED






Boats such as this are mentioned more than 50 times in the Gospel accounts of Jesus' ministry in Galilee, but there is no evidence to link this particular boat to Jesus or his disciples.



## CARBON DATING




However, radio carbon dating has established that the Jesus Boat began life as a fishing vessel between 120 BC and AD 40, a period that could encompass the time that Jesus spent on the Sea of Galilee.

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - ஜூலை 2021

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | யோசுவா 3 | சங்கீதம் 126-128 | ஏசாயா 63 | மத்தேயு 11 |
| 2 | யோசுவா 4 | சங்கீதம் 129-131 | ஏசாயா 64 | மத்தேயு 12 |
| 3 | யோசுவா 5,6:1-5 | சங்கீதம் 132-134 | ஏசாயா 65 | மத்தேயு 13 |
| 4 | யோசுவா 6:6-27 | சங்கீதம் 135,136 | ஏசாயா 66 | மத்தேயு 14 |
| 5 | யோசுவா 7 | சங்கீதம் 137,138 | எரேமியா 1 | மத்தேயு 15 |
| 6 | யோசுவா 8 | சங்கீதம் 139 | எரேமியா 2 | மத்தேயு 16 |
| 7 | யோசுவா 9 | சங்கீதம் 140,141 | எரேமியா 3 | மத்தேயு 17 |
| 8 | யோசுவா 10 | சங்கீதம் 142,143 | எரேமியா 4 | மத்தேயு 18 |
| 9 | யோசுவா 11 | சங்கீதம் 144 | எரேமியா 5 | மத்தேயு 19 |
| 10 | யோசுவா 12,13 | சங்கீதம் 145 | எரேமியா 6 | மத்தேயு 20 |
| 11 | யோசுவா 14,15 | சங்கீதம் 146,147 | எரேமியா 7 | மத்தேயு 21 |
| 12 | யோசுவா 16,17 | சங்கீதம் 148 | எரேமியா 8 | மத்தேயு 22 |
| 13 | யோசுவா 18,19 | சங்கீதம் 149,150 | எரேமியா 9 | மத்தேயு 23 |
| 14 | யோசுவா 20,21 | அப்போ. 1 | எரேமியா 10 | மத்தேயு 24 |
| 15 | யோசுவா 22 | அப்போ. 2 | எரேமியா 11 | மத்தேயு 25 |
| 16 | யோசுவா 23 | அப்போ. 3 | எரேமியா 12 | மத்தேயு 26 |
| 17 | யோசுவா 24 | அப்போ. 4 | எரேமியா 13 | மத்தேயு 27 |
| 18 | நியா. 1 | அப்போ. 5 | எரேமியா 14 | மத்தேயு 28 |
| 19 | நியா. 2 | அப்போ. 6 | எரேமியா 15 | மாற்கு 1 |
| 20 | நியா. 3 | அப்போ. 7 | எரேமியா 16 | மாற்கு 2 |
| 21 | நியா. 4 | அப்போ. 8 | எரேமியா 17 | மாற்கு 3 |
| 22 | நியா. 5 | அப்போ. 9 | எரேமியா 18 | மாற்கு 4 |
| 23 | நியா. 6 | அப்போ. 10 | எரேமியா 19 | மாற்கு 5 |
| 24 | நியா. 7 | அப்போ. 11 | எரேமியா 20 | மாற்கு 6 |
| 25 | நியா. 8 | அப்போ. 12 | எரேமியா 21 | மாற்கு 7 |
| 26 | நியா. 9 | அப்போ. 13 | எரேமியா 22 | மாற்கு 8 |
| 27 | நியா. 10,11:1-11 | அப்போ. 14 | எரேமியா 23 | மாற்கு 9 |
| 28 | நியா. 11:12-40 | அப்போ. 15 | எரேமியா 24 | மாற்கு 10 |
| 29 | நியா. 12 | அப்போ. 16 | எரேமியா 25 | மாற்கு 11 |
| 30 | நியா. 13 | அப்போ. 17 | எரேமியா 26 | மாற்கு 12 |
| 31 | நியா. 14 | அப்போ. 18 | எரேமியா 27 | மாற்கு 13 |